சந்மார்க்கபோதினி.

(இரண்டாம் பாகம்.)

ஆரம்ப வித்தியாசாலை
நான்காவது வகுப்புக்கு ஏற்றது.

0
5

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர்
வித்தியாநுபாலன அச்சகம்
சென்னை.

விலை அணா 2.

சந்மார்க்க போதினி.

(இரண்டாம் பாகம்.)

ஆரம்ப வித்தியாசாலை

நான்காவது வகுப்புக்கு ஏற்றது.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்.

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1953.

விலை அணா 2.

முகவுரை.

கல்வியால் மனிதர் பூரண பலனை அடைவதானால் அக் கல்வி ஈசுர ஞானத்தையும் பத்தியையும் பிறப்பிக்கவும் வளர்க்கவும் தக்கதாக அமைக்கப்பட வேண்டுமென்பது உலகெங்கும் பெரும்பான்மை கற்றோருடைய அபிப்பிராயமாகத் திகழ்கின்றது. ஒரே சமய உணர்ச்சியுள்ள மாணவர் ஒருங்கு சேர்ந்து கற்கும் வித்தியாசாலைகளிலே சமயக் கல்வியை விரும்பியவண்ணம் அமைப்பது இலகு. ஆயினும் இந்நாட்டிலே பல்வேறு சமயத்தினராகிய மாணவர் கற்கும் வித்தியாசாலைகளிலே ஒவ்வொரு சமயத்தவர்க்கும் அவரவருக்கேற்ற சமயக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்வது இலகுவன்று. ஆதலினால் சமயக் கல்வியை ஊட்ட இயலாத நிலையில், எல்லாச் சமயத்தவரும் அங்கீகரிக்கக்கூடிய சன்மார்க்க போதனைக் கல்வியையாயினும் இவ்வித்தியாசாலைகளில் ஊட்டுதல் பொதுவாய், சமூகவாழ்க்கைக்கு ஓரளவிற்கு நற்பயனை அளிக்குமென்ற அபிப்பிராயத்தைப் பெரியோர் ஏற்றுக்கொள்ளுவார்களென நம்புகிறேன். தமிழிலே நீதிநூல்கள் மலிந்து பொலிந்திருந்தபோதிலும், தற்கால அரசினர் கல்வித்திட்ட முறைக்கேற்ப, மாணவருடைய வயதுக்கும் வகுப்புக்கும் அறிவுத்தகைமைக்கும் ஏற்றவாறு அவைகள் வகுக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலினால் நீதிநூல்திரளில் சிலவற்றை ஆராய்ந்து, சாதி, சமய, தருக்க சம்பந்தமான பாகங்களை விலக்கி வகுப்பு வளர்ச்சிக்கு ஏற்றவாறு தேர்ந்து வகுப்புமுறையில் தொகுத்துப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

ஆராயப்பட்ட நூல்களாவன:—ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களால் செய்யப்பட்ட பாலபாடம் இரண்டாம் புத்தகமும், அவராலே உரை செய்யப்பட்ட ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, முதலிய நூல்களிலமைக்கப்பட்டிருக்குந் தாற்பரியங்களும், இன்னும் நாலடியார், நீதிவெண்பா, நீதிநெறிவிளக்கம், திரிகடுகம், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், திருக்குறள் முதலிய நூல்களில் சில பாகங்களுமாம். இவைகளைச் சேர்க்கவும் தொகுக்கவும் இவ்வித்தியாசாலையில் கடமையாற்றும் சில தமிழ்ப்பண்டிதர் செய்த உதவிக்கு நன்கு நன்றி பாராட்டுகின்றேன்.

இப்பிரசுரங்கள் ஒவ்வொரு வகுப்புக்குத் தேவையான அளவில் தனிப்பாகங்களாகவும் எல்லாப் பாகங்களுஞ் சேர்த்துக் கட்டப்பட்ட ஒரே புத்தகமாகவும் இவ்வித்தியாசாலையிலும், சென்னை தங்கசாலைவீதி 300-நெம்பர், புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தனிப் பாகம் விலை அணு 2. முழுத்தொகுதி ரூபாய் ஒன்று.

சிதம்பரம்.
நாவலர் சைவப்பிரகாச
வித்தியாசாலை.
நந்தனவரு சித்திரை மீ.

G. சுப்பிரமணியம்.
தருமபரிபாலகர்.

சந்மார்க்க போதினி.

இரண்டாம் பாகம்.

ஔவையார் அருளிச்செய்த கொன்றைவேந்தனி
லிருந்தும் அதிவீரராமபாண்டியன் அருளிச்
செய்த வெற்றிவேற்கையிலிருந்தும்
தொகுக்கப்பட்டது.

1. அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்.

(இ - ள்.) தாயும், தகப்பனும் முன்னே காணப்பட்ட தெய்வங்களாவர்.

2. ஆலயம் தொழுவது சாலவு நன்று.

(இ - ள்.) கோயிலுக்குப் போய்க் கடவுளை வணங்குவது மிகவும் நல்லது.

3. இல்லற மல்லது நல்லற மன்று.

(இ - ள்.) மனையாளோடு கூடிச் செய்யும் இல்லறமானது எளிதில் செய்யத்தகும் அறமாகும். இல்லறமல்லாத துறவறமானது எளிதிற் செய்யத்தகும் அறமன்றாகும்.

(இ - ள்.) இதன்பொருள்.

4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.

(இ-ள்.) கொடாதவருடைய சம்பாத்தியத்தைக் கள்ளர் முதலாகிய தீயவர் அபகரிப்பார்.

5. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.

(இ - ள்.) தான் இருக்கும் ஊராருடன் ஒருவன் விரோதித்தால் அவன் தன் வமிசத்துடன் கெடுவான்.

6. எண்ணு மெழுத்துங் கண் எனத்தகும்.

(இ - ள்.) கணித நூலும், இலக்கண நூலும் மனிதருக்கு இரண்டு கண்களென்று சொல்லப்படும்.

7. ஏவா மக்கண் மூவா மருந்து.

(இ - ள்.) பெற்றவர் இதைச் செய் என்று ஏவுதற்கு முன் குறிப்பறிந்து செய்கிற பிள்ளைகள் அப்பெற்றவருக்குத் தேவாமிர்தம் போல்வர்.

8. ஐயம் புகினுஞ் செய்வன செய்.

(இ - ள்.) பிச்சை யெடுத்தாலும் செய்யத்தகுங் கருமங்களை நீ விடாது செய்.

9. ஒருவனைப் பற்றி ஓரகத் திரு.

(இ - ள்.) நற்குணமுடைய ஒருவனைத் துணையாகப் பற்றிக்கொண்டு ஓரிடத்திலேதானே நீ எப்போதும் வாசம் பண்ணு.

10. ஒளவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு.

(இ - ள்.) பொறாமை வார்த்தைகளை ஒருவன் பேசுதல் அவன் செல்வத்திற்குக் கேட்டைத் தருவதாகும்.

11. அஃகமுங் காசுஞ் சிக்கெனத் தேடு.

(இ - ள்.) தானியத்தையும், திரவியத்தையும் நீ வீண் செலவு செய்யாமற் சம்பாதி.

12. கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை.

(இ - ள்.) பெண்களுக்குக் கற்பென்று சொல்லப் படுவது கணவர் சொல்லுக்குத் தப்பி நடவாமையாம்.

13. காவல் தானே பாவையர்க் கழகு.

(இ - ள்.) கற்புக்கு அழிவு வராமல் தம்மைக் காத்துக் கொள்வதுதானே பெண்களுக்கு அழகாகும்.

14. கிட்டா தாயின் வெட்டென மற.

(இ - ள்.) இச்சித்த ஒரு பொருள் கிடையாதானால் சீக்கிரத்திலேதானே அப்பொருளை மறந்துவிடு.

15. கீழோ ராயினுந் தாழ வுரை.

(இ - ள்.) கேட்பவர் உனக்குக் கீழ்ப்பட்டவராய் இருந்தாலும் உன் சொல் வணக்கமுடையதாய் இருக்கும்படி நீ அவருடன் பேசு.

16. குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை.

(இ - ள்.) குற்றங்களை ஆராய்ந்து பார்த்தால் உறவாவோர் ஒருவரும் இல்லை.

17. கூரம் பாயினும் வீரியம் பேசேல்.

(இ - ள்.) உன் கையிலிருக்கிறது கூர்மை பொருந்திய அம்பானாலும் வீரத்தன்மையை நீ வீணாகப் பேசாதே.

18. கெடுவது செய்யின் விடுவது கருமம்.

(இ - ள்.) கெடுவதைத் தன் சிநேகன் செய்தால் அவன் சிநேகத்தை விடுவதே நற்செய்கையாம்.

19. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.

(இ - ள்.) கையிலிருக்கிற பொருளைப் பார்க்கிலும் மெய்ப்பொருளாவது கல்வியேயாம்.

20. கௌவை சொல்லி னெவ்வருக்கும் பகை.

(இ - ள்.) பிறர்மேலே பழிச்சொல்லுகளை ஒருவன் சொல்லினுல் எல்லார்க்கும் அவன் பகையாவான்.

21. சந்ததிக் கழகு வந்தி செய்யாமை.

(இ - ள்.) தன் வமிசம் பெருகுதற்கு அழகாவது மலடியாகச் செய்யாமல் தன் மனையாளோடு கூடி வாழ்தலாம்.

22. சான்ருே ரென்கை யீன்ருேட் கழகு.

(இ - ள்.) தன் புத்திரரைக் கல்வியறிவால் நிறைந்தோர் என்று கற்றவர் சொல்லுகிறது பெற்றவளுக்கு அழகாகும்.

23. சீரைத் தேடி னேரைத் தேடு.

(இ - ள்.) சௌக்கியத்தை நீ தேடுவாயானுல் பயிரிடுந் தொழிலைத் தேடிக்கொள்ளு.

24. சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்.

(இ - ள்.) உறவினருக்கு அழகாவது சுபாசுபங்களிலே பலரும் வந்து சூழ, சமீபங்களிலே குடியிருக்கையாகும்.

25. சூதும் வாதும் வேதனை செய்யும்.

(இ - ள்.) சூதாடுதலும் தருக்கம் பேசுதலும், வருத்தத்தை உண்டாக்கும்.

26. செய்தவ மறந்தாற் கைதவ மாளும்.

(இ - ள்.) செய்யுந் தவத்தை ஒருவன் மறந்தால் பொய்யாகிய அஞ்ஞானமானது அவனை அடிமை கொண்டு ஆளும்.

27. சேமம் புகினும் யாமத் துறங்கு.

(இ - ள்.) காவற் கூடத்திலே போய் ஒரு வேலையும் இல்லாமல் இருந்தாலும் ஏழரை நாழிகைக்குப் பின் நித்திரை பண்ணு.

28. சையொத் திருந்தால் ஐய மிட்டுண்.

(இ - ள்.) பொருள் ஒத்திருந்தால் பிச்சை இட்டு, நீயும் உண்ணு.

29. சொக்க ரென்பவர் அத்தம் பெறுவர்.

(இ - ள்.) பொன்னுடையவர் என்று சொல்லப்படுவோர் அறமும் இன்பமுமாகிய மற்றைப் புருஷார்த்தங்களையும் பெறுவார். சொக்கு - பொன்.

30. சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்.

(இ - ள்.) சோம்பலுடையவர் என்று சொல்லப்படுவோர் வறுமையினால் வருந்தி இரந்து திரிவார்.

31. தந்தைசொன் மிக்க மந்திர மில்லை.

(இ - ள்.) பிதாவினுடைய சொல்லுக்கு மேற்பட்ட பலனைத்தரும் மந்திரமானது ஒருவனுக்கு எந்த நூலிலும் இல்லை.

32. தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை.

(இ - ள்.) *மாதாவைப் பார்க்கிலும் சிறப்புப் பொருந்திய ஒரு ஆலயமும் ஒருவனுக்கு எங்கும் இல்லை.*

33. திரைகட லோடியுந் திரவியந் தேடு.

(இ - ள்.) *அலைகின்ற கடலிலே தோணியேறித் தூர தேசங்களிற் போயானாலும் திரவியத்தை, நீ சம்பாதி.*

34. தீராக் கோபம் போரா முடியும்.

(இ - ள்.) *நீங்காத கோபமானது பின்பு சண்டையாக முடிந்து விடும்.*

35. துடியாப் பெண்டிர் மடியி னெருப்பு.

(இ - ள்.) *தங்கணவருக்குத் துன்பம் வந்தபோது மனம் பதையாத பெண்கள், அவர் வயிற்றில் அக்கினிக்கு ஒப்பாவார்.*

36. தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்.

(இ - ள்.) *தங்கணவர்மேல் குற்றஞ்சொல்லித் தூற்றுகிற பெண்களை, அவருக்கு இயமன் என்று எண்ணத் தகும்.*

37. தெய்வஞ் சீறிற் கைதவ மாளும்.

(இ - ள்.) *தெய்வமானது ஒருவனைக் கோபித்தால் அவனுக்குக் கைகூடியிருந்த தவமும் பயன் கொடாமல் அழியும்.*

38. தேடா தழிக்கிற் பாடா முடியும்.

(இ - ள்.) *ஒருவன் வருந்திச் சம்பாதியாமல் இருக்கிற பொருளைச் செலவழித்தால் அவனுக்குப் பின் வருத்தமாக முடியும்.*

39. தையும் மாசியும் வையகத் துறங்கு.

(இ - ள்.) தை மாதத்திலும் மாசி மாதத்திலும் பனி வருத்தந் தாராத வைக்கோல் வீட்டிலே நீ நித்திரை பண்ணு.

40. தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது.

(இ - ள்.) ஒருவரைச் சேவித்து உண்ணும் உணவினது சுவையைப் பார்க்கிலும் உழுது பயிர் செய்து உண்ணும் உணவின் சுவை இன்பந் தருவதாகும்.

41. தோழ னோடு மேழமை பேசேல்.

(இ - ள்.) உன் சிநேகனோடாயினும் உனக்கு இருக்கிற சிறுமையை நீ எப்படிப்பட்ட வேளையிலும் பேசாதே.

42. நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்.

(இ - ள்.) நல்ல சகவாசம் அல்லாதது துன்பத்தையே உண்டாக்கும்.

43. நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை.

(இ - ள்.) தேசமெங்கும் செழித்திருக்குமாயின் திருட்டு முதலாகிய கேடொன்றும் இல்லை.

44. நீரகம் பொருந்திய வூரகத் திரு.

(இ - ள்.) நீர்வளமானது தனக்குள்ளே பொருந்திய மழையில்லாத பஞ்சத்திலும் அமைந்த ஊரினிடத்திலே, நீ குடியிரு.

45. நுண்ணிய கருமமு மெண்ணித் துணி.

(இ - ள்.) சிறிய தொழிலையும், முடிக்கும் வழியை நன்றாக ஆலோசித்து நீ பின்பு அதைச் செய்யத் துணி.

46. நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு.

(இ - ள்.) *தருமநூலிலே சொல்லப்பட்ட விதிகளின் முறையை அறிந்து நல்லொழுக்க வழியில், நீ நட.*

47. நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை.

(இ - ள்.) *தம்முடைய மனசுக்கு மறைக்கப்பட்டதாகிய யாதொரு வஞ்சனையும் யாவரிடத்திலும் இல்லை.*

48. நேரா நோன்பு சீரா காது.

(இ - ள்.) *மனசினால் உடன்படாத தவமானது சீராக முடியாது.*

49. நைபவ ரெனினும் நொய்ய வுரையேல்.

(இ - ள்.) *கேட்பவர் எதிர்பேசாமல் வருந்துவோராயினும் அற்பவார்த்தைகளை நீ, சொல்லாதே.*

50. நோன் பென்பதுவே கொன்று தின்னாமை.

(இ - ள்.) *தவமென்று சொல்லப்படுவது ஒரு சீவனை வதை செய்து அதன் மாமிசத்தைத் தின்னாமையேயாம்.*

51, பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்.

(இ - ள்.) *ஒருவன் செய்த பயிரின் விளைவினாலும், விளைவில்லாமையினாலும் அவனிடத்தே புண்ணியம் இருத்தலும் இல்லாமையும் அறியப்படும்.*

52. பாலோ டாயினும் காலமறிந் துண்.

(இ - ள்.) *பாலோடு கூடிய அன்னத்தை உண்டாலும் உண்ணத்தகுங் காலத்தை அறிந்து நீ அதை உண்ணு.*

53. புலையுங் கொலையுங் களவுந் தவிர்.

(இ - ள்.) புலாலுண்ணுதலையும், சீவ வதை செய்தலையும், பிறர் பொருளைத் திருடுதலையும், நீ செய்யாது ஒழித்து விடு.

54. பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்.

(இ - ள்.) தீங்குகள் என்று சொல்லப்பட்டவைகளாகிய எல்லாவற்றையும் நீ செய்யாது ஒழித்து விடு.

55. மருந்தே யாயினும் விருந்தோ டுண்.

(இ - ள்.) உண்ணப்படுவது கிடைத்தற்கு அரிய தேவாமிர்தமேயானாலும் வந்த விருந்தாளிகளோடு கூடி நீ உண்ணு.

56. மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம்.

(இ - ள்.) கல்வியினாலே முதிர்ந்தவர் சொல்லிய வார்த்தையானது தேவாமிர்தத்தைப் போலும்.

57. மேழிச் செல்வம் கோழை படாது.

(இ - ள்.) கலப்பையைப் பிடித்து உழுது பயிர் செய்வதினால் உண்டாகுகிற செல்வமானது ஒருபோதும் குறைவை அடையாது.

58. உரவோ ரென்கை யிரவா திருத்தல்.

(இ - ள்.) வல்லவரென்று சொல்லப்படுதல் தமக்குச் சிறுமை வந்த காலத்திலும் பிறரை இரவாமல் இருக்கையாம்.

59. வையந் தோறும் தெய்வந் தொழு.

(இ - ள்.) பூமியிலுள்ள தலந்தோறும் போய்க் கடவுளை நீ தரிசித்து வணங்கு.

60. ஓதாதார்க் கில்லை யுணர்வொடு மொழுக்கம்.

(இ - ள்.) அறிவு நூல்களைப் படியாதவருக்கு அறிவுடனே நல்ல நடையும் உண்டாதல் இல்லை.

61. எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்.

(இ - ள்.) நமக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் கடவுளுக்குச் சமமானவர். [எழுத்து: எழுத்தாலாகிய நூலைக் குறித்தது.]

62. கல்விக் கழகு கசடற மொழிதல்.

(இ - ள்.) பிழையறப் பேசுதலே கற்றவர்களுக்கு உள்ள இயல்பாகும்.

63. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.

(இ - ள்.) சுற்றத்தாரை வறுமைக் காலத்தில் காப்பதே செல்வர்களுக்கு அழகாம்.

64. வேதியர்க் கழகு வேதமும் ஒழுக்கமும்.

(இ - ள்.) வேதம் ஓதலும், ஆசாரம், தருமம் நீதி முதலிய நெறிகளை உடையவராயிருத்தலும் பிராமணருடைய இயல்பாம்.

65. உழவர்க் கழகு உழுதூண் விரும்பல்.

(இ - ள்.) பயிரிட்டு வாழ்தலை விரும்புதல் வேளாளர் இயல்பு.

66. பெண்டிர்க் கழகு எதிர் பேசாதிருத்தல்.

(இ - ள்.) கணவரோடு எதிர்த்துப் பேசாதிருந்து வாழ்தலே மனைவியருக்குச் சிறப்பாம்.

67. குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்.

(இ - ள்.) தன்னுடைய கணவனை அன்போடும் மரியாதையோடுங் காப்பாற்றி நடத்தலே நல்ல குலப்பெண்ணுக்கு உள்ள இயல்பு.

68. அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.

(இ - ள்.) நல்ல நூல்களைக் கற்றுத் தெளிந்து அமைந்து தாழ்மையாய் நடத்தலே அறிவுடையார் குணம்.

69. வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.

(இ - ள்.) வறுமை வந்தபோதன்று செம்மையைக் கைவிடாமல் நடப்பதே தரித்திரருக்கு இயல்பு. [செம்மை: மானத்தைவிட்டு யாசகஞ் செய்யாமையும் இழிதொழில் செய்யாமையும்.]

70. பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.

(இ - ள்.) உயர்வுந் தாழ்வும் அவரவர்க்குத் தத்தம் செய்கையால் உண்டாகும்.

71. இரந்தோர்க் கீவது முடையோர் கடனே.

(இ - ள்.) பொருளுடையோர் யாசகர்க்குக் கொடுக்க வேண்டியது அவசியம்.

72. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.

(இ - ள்.) செல்வமாயினும், தரித்திரமாயினும், ஓரிடத்தில் நிலைத்து நிற்கமாட்டா.

73. தன்னு யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.

(இ - ள்.) தன் ஆயுதத்தையும் தன் கைப்பொருளை யும் பிறர் கையில் கொடுத்தலாகாது.

74. அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசோ டிருந்தர சாளினு மாளுவர்.

(இ - ள்.) தருமத்திற்காக இடப்படும் பிச்சையை, இரப்போர், அரசிலக்கணத்தோடு இருந்து அரசாண்டாலும் ஆளுவார்கள்.

75. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினு மழிவர்.

(இ - ள்.) மலைபோன்ற செல்வத்தைப் பெற்றவ[ர்] பெற்ற அன்றே பயனடையாமல் இறப்பினும் இறப்பர்.

பிரகடன பத்திரம்.

	ரூ.	அ.	பை.
முதற்பாலபாடம்	0	3	0
இரண்டாம்பாலபாடம்	0	5	0
மூன்றாம்பாலபாடம்	0	10	0
நான்காம்பாலபாடம்	1	4	0
நான்காம்பாலபாடம் குறிப்புரையும் அப்பியாச வினாக்களும்	1	12	0
முதற்சைவவினாவிடை	0	3	0
இரண்டாஞ்சைவவினாவிடை	0	10	0
திருக்குறள் மூலம்	0	8	0
திருவள்ளுவர் பரிமேலழகருரை	5	0	0
நன்னூல் மூலம்	0	3	0
நன்னூல் விருத்தியுரை	3	8	0
நன்னூற்காண்டிகையுரை	3	8	0
இலக்கணச்சுருக்கம்	1	0	0
இலக்கணவினாவிடை	0	3	0
இலக்கணக்கொத்துரை தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கணவிளக்கச் சூறாவளி	1	8	0
தொல்காப்பியம் சேனாவரையம்	3	0	0
பெரியபுராண வசனம்	[illegible]	[illegible]	[illegible]
சிதம்பரமான்மியம்	[illegible]	[illegible]	[illegible]
சிவஞானபோதம் சிவஞானமுனிவர் சிற்றுரை	[illegible]	[illegible]	[illegible]
திருக்கோவையாருரை	[illegible]	[illegible]	[illegible]
ஆறுமுகநாவலர் சரித்திரம்	1	4	0

T1
RO

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்,
வித்தியாநுபாலனயந்திரசாலை,
நெ. 300, தங்கசாலை வீதி, சென்னை.